# அரண்

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :28 October 2025

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# அகத்தினுள்

ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்
மெ.பேபி நிஷாந்தினி

பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்
ப.ராம்குமார்

புறநானூற்றில் உயிரியல் செய்திகள்
எம்ஜிராமச்சந்திரன். வெ

புறநானூற்றில் தமிழர் பண்பாடு
திருமதி கா.சுகன்யா,

செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு
இரா.சினேகலதா

திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்
முனைவர் இரா.ஜெய்சங்கர்

திருக்குறளில் மருத்துவச் செய்திகள்
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை
க.நித்தியா

அபிராமி அந்தாதி - ஒரு பார்வை
சா.கஸ்தூரி

வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்
முனைவர் த. சுபஜா

வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை
முனைவர்ப.தனஞ்செயன்

தெய்வங்களும் கோவில்களும்
அ.அறிவுக்கொடி

பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்
க.கார்த்திகா

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வெளவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

பொதிகைமலையின் ஆயண்டிரன்
முனைவர் த. முத்துலட்சுமி

பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்
கி.தமிழரசி

பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்
ம.கலைச்செல்வன்

இலக்கியங்களும் பசிப்பிணியும்
முனைவர் ப. மணிகண்டன்

அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்
முனைவர் அ.புஷ்பா

கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்
கு.நிவேதா

மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு
முனைவர் ஈ இசக்கியம்மாள்

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.
(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)
திரு. விசுமாப்போடி சசிகரன்

பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி
முனைவர் வே.இரவி

கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்
முனைவர் அ. மதலேன்

சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்
முனைவர்அ. அமுல்ராஜ்

பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# கணினி மற்றும் ஊடகம்

# கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்

# *Internet Libraries in Tamil Computing Development*

**கட்டுரையாளர்: கு.நிவேதா, பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,** பதிவு எண்:*BDU2220632779956* தமிழாய்வுத்துறை, காவேரி மகளிர் கல்லூரி(தன்னாட்சி), திருச்சி - 620018. பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப்பெற்றது. *ORCID :https://orcid.org/0009-0006-7450-7447 K.Nivetha part time Research Scholar Reg No:BDU2220632779956 Department of Tamil, Cauvery College for women, (Autonomous) Trichy - 620 018. Affiliated to Bharathidhasan University. ORCID :https://orcid.org/0009-0006-7450-7447*

**நெறியாளர்: முனைவர்ப.சசிரேகா,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, காவேரி மகளிர் கல்லூரி(தன்னாட்சி), திருச்சி - 620018. பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப்பெற்றது. *Dr. P. Sasirekha Asst.Professor Department of Tamil, Cauvery College for women, (Autonomous) Trichy - 620 018. Affilicated to Bharathidhasan University. ORCID :https://orcid.org/0000-0002-7749-9669*

***Abstract***

*The first step in the development of human knowledge was the creation of language by man for the exchange of ideas, our mother tongue Tamil, which was in the exotional and sound levels, traveld on various tracks such as Olaichuvadi, Seppedu. After the development of printing presses many literatures appeared in our mother tongue as texts. Thus all the books were collected together and stored in libraries. Stored in libraries. With the help of libraries, common people also got the opportunity to read the books they needed. The days of going to libraries and reading books have passed and today the internet helps us in many ways to read the books we need from where we were. The facilities of reading texts through the computers and smartphones that we use through the internet are increasing. Internet the purpose of this revies article is to reveal the origin of the library, the benefits of online libraries and their necessity.*

***Keywords***

*Internet, E-Library, Internet Library, Library Software, Tamil Virtual University.*

**ஆய்வுச்சுருக்கம்**

கருத்துப் பரிமாற்றத்திற்காக மனிதன் மொழியைத் தோற்றுவித்ததே மனித அறிவு வளர்ச்சியின் முதற்படி ஆகும். உணர்ச்சி, ஒலி நிலைகளில் இருந்த நம் தாய்மொழியாகிய தமிழ் கல்வெட்டு, ஓலைச்சுவடி, செப்பேடு என பல்வேறு தடங்களில் பயணித்து வந்தது. அச்சு இயந்திரங்களின் உருவாக்கத்திற்குப் பிறகு நூல்களாக நமது தாய்மொழியில் பல இலக்கியங்கள் வெளிவந்தன. இவ்வாறாக அச்சு நூல்கள் அனைத்தையும் ஒன்று திரட்டி நூலகங்களில் சேமிக்கப்பட்டன. நூலகங்கள் உதவியினால் எளிய மக்களும் தங்களுக்குத் தேவையான நூல்களை வாசிக்கும் வாய்ப்புப் பெற்றனர். நூலகங்களுக்குச் சென்று நூல்களைப் படித்த காலங்கள் கடந்து இன்று நமக்குத் தேவையான நூல்களை நாம் இருந்த இடத்திலிருந்தே படிக்கும் வண்ணம் இணையம் இன்று பல வழிகளில் துணைபுரிகின்றன. இணையத்தின் மூலம் நாம் பயன்படுத்தும் கணினி, திறன்பேசிகள் வழியாக நூல்களை வாசிக்கும் வசதிகள் பல்கிப் பெருகி வருகின்றன. இணைய நூலகத்தின் தோற்றம், இணைய நூலகங்களின் பயன்கள் அவற்றின் அவசியம் போன்றவற்றை வெளிப்படுத்தும் வண்ணம் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றன.

**திறவுச்சொற்கள்**

இணையம், மின்னூலகம், இணைய நூலகங்கள், நூலக மென்மம், தமிழ் இணையக் கல்விக் கழகம்.

**முன்னுரை**

இணையத்தைப் பயன்படுத்தி கணினியில் தமிழ் நூல்களைச் சேகரித்து வைத்தன் விளைவாக பல இணைய நூல்கள் தோற்றம் பெற்றன. காலப் போக்கில் இந்த இணைய நூலகளின் தொகுப்பு இணைய நூலகங்களாக வளர்ச்சியடைந்தன. இணைய நூலகங்கள் பல்வேறு நாடுகளில் வசிக்கும் தமிழர்களை ஒன்றிணைக்கும் வகையில் அமைகின்றது. இணையம் வழி பல தமிழ் அச்சு நூல்களை சேமித்து வைப்பதன் மூலம் தமிழர்களின் அடையாளமாக விளங்கும் சங்க இலக்கியங்கள் போன்றவற்றை அழியாமல் பாதுகாத்துக் கொள்ள உதவுகின்றது. இவ்வாறு நமது பண்பாடு கலாச்சாரங்களை வெளிப்படுத்தும் தமிழ் நூல்களின் களஞ்சியங்களாக அமையும் இணைய நூலகங்களின் செயல்பாடுகள், பயன்கள் போன்றனவறைப் பின்வரும் பகுதிகள் வெளிப்படுத்துகின்றன.

**மின்நூல்கள்**

கணினி உதவியுடன் நூல்களை அச்சு வடிவில் கண்டறிந்து படிப்பதே மின்நூல்கள் என்று அறியப்படுகின்றது. அச்சு நூல்களில் இடம்பெற்றுள்ள செய்திகளைப் போலவே கணினி

உதவியுடன் தட்டச்சு செய்து இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு அதனைப் படிக்கும் வகையில் மின்நூல்கள் உருவாக்கப்படுகிறது. இணையத்திலிருந்து நூல்களைத் தரவிறக்கம் செய்து கணினியில் சேமித்து வைத்துத் தேவைப்படும் சூழலில் படிக்கும் நிலையிலும் மின்நூல்கள் உருவாக்கப்படுகின்றன. இதனால் நாம் அதிக அளவில் நேரம் செலவிடத் தேவையில்லை

பிளாஷ் மென்பொருளைப் பயன்படுத்தி தமிழ் மொழியில் அமைந்த எந்த ஒரு கோப்பையும் மின் புத்தகமாக எளிதில் மாற்ற முடியும். இதன் மூலம் எளிதில் மின்னூலைப் படிக்க முடிகிறது. இம்மென்பொருளில் அதிக அளவிலான பக்கங்கள், படங்களை இணைக்கும் வசதிகள் உள்ளன.

***தமிழ்மொழியில் 2003ஆம் ஆண்டு முதல்வன் எனும் பெயரில் அமைந்த மின்னூலை முனைவர் சிதம்பரம் அவர்கள் வெளியிட்டார். தமிழ் மின்னூல்கள் இடம்பெற்றுள்ள வலைத்தளம் மற்றும் வலைப்பதிவுகள் ஆகியன இம்மின்னூலில் இடம்பெற்றுள்ளன.(தமிழ்க் கணினி இணையப் பயன்பாடுகள், ப.196.)***

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி பிற துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியது போலவே கல்வித்துறையிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. அதன் விளைவே மின்னூல்கள், மின்னூலகங்கள் ஆகும்.

> ***தமிழர்க்குத் தமிழ்மொழியில் சுவடிச்சாலை***
> ***சர்வகலா சாலையைப் போல் எங்கும் வேண்டும் (பாரதிதாசன் கவிதைகள் புத்தகச்சாலை, ப,44)***

என்ற பாரதிதாசனின் கூற்றிணை வெளிப்படுத்தும் வண்ணம் இன்று இணைய மின்னூலகங்கள் செயல்படுகின்றன.

### மின்னூலகம்(Digital Library)

நூலறிவே ஆகுமாம் நுண்ணறிவு எனும் ஔவையின் கூற்றுப்படி மனிதனின் நுண்ணறிவு வளர்ச்சிக்கு நூலகங்களே முதன்மையிடம் பெறுகின்றன. பழையன கழிதலும் புகுதலும் வலுவல கால வகையினானே எனும் பவணந்தி முனிவரின் கூற்றிற்கேற்ப கருத்துக்களை கருவாக சுமந்து வந்த ஓலைச்சுவடிகள் கால மாறுதல்களுக்கேற்ப அச்சு வடிவில் நூல்களாயின. இவ்வாறு அச்சு வடிவில் ஏற்பட்ட நூல்களைப பாதுகாக்க நூலகங்களின் தேவை அதிகமாயின. பாதுகாக்கப்பட்ட நூல்களை நூலகங்கங்கள் சென்று படிக்கும் ஆர்வம் குறைந்ததாலும், இயந்திரமாக்கப்பட்ட வாழ்கை மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி காரணங்களாலும் மின்னூல்கள் அதிக அளவில் தோற்றம் பெற்றன.

**"மின்னூலகம் என்பது வழக்கிலுள்ள அச்சு வடிவம் அல்லது மைரோபிலிம்(*Microfilm*) வடிவத்திலுள்ள புத்தகங்களை அல்லது அவற்றிலுள்ள ஒரு பகுதியை மாற்று வழியாகவோ, மறு பிரதியாகவோ, துணை பொருளாகவோ மின்னியல் வடிவில் பாதுகாத்து வைக்கும் நூலகமாகும். (தமிழ்க் கணினி இணையப் பயன்பாடுகள், ப.185)**

நேரடியாக ஒரு நூலகத்திற்குச் சென்று நூலை எடுத்துப் படிப்பது போன்று நூல்களை இணைய வழியாகவும், கோப்பு வடிவிலும் தரவிறக்கம் செய்து தங்கள் கணினியிலிருந்து எப்பொழுது வேண்டுமானாலும் படிப்பதற்கும் ஏற்ற வகையிலும் அமைவதே மின்னூலகம் ஆகும். இத்தகைய மின்னூலகம் ஆங்கிலத்தில் *online e- Library* என்று அழைக்கப்படும் இணையதளங்களாக செயல்படுகின்றன.

**"*www.noolagam.com, www.noolaham.org, www.tamilvu.org, www.project madurai.org, www.tamizham.net,* போன்ற பல்வேறு இணைய தளங்கள் தமிழ் மின்னூலக சேவையை வழங்குகின்றன. *www.textbooks online.tn.nic.in* எனும் தமிழக அரசின் இணையதளம் வழியாக தமிழ் நாட்டுப் பள்ளி நூல்களைப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக்கொள்ளலாம்.*(http://www.srmuniv.ac.in/tamilperyam/diploma.dtt./lessons/Iyear/ diplo3/html/dipo3004eapq.html)***

**மின்னியல் நூலகப் பயன்பாடு**

- நூலகத்திலிருந்து பெற விழையும் தகவல்களை நூலகத்திற்குச் செல்லாமலேயே நாம் இருக்கும் இடத்திலிருந்தே கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
- உலகில் எங்கு நூல்கள் எந்த நாட்டில் உருவாகியிருந்தாலும் நாம் அந்நூல்களை வாசிக்க இயலும்.
- நூலகச் சாதனங்கள் பற்றிய தகவல்களைப் பயன்பாட்டாளர்களுக்கு எளிதில் தெரியப்படுத்த உதவுகிறது.
- பல உரையாசிரியர்களின் உரையை ஒரே நேரத்தில் பெற்றுக் கொள்ளும் வசதியும் மின்னூலகங்களில் உள்ளது.

**மின்னூலகங்களின் தோற்றம்**

21ம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி சாதனமாக விளங்கும் கணினி நூல்களைப் பாதுகாக்கும் நூலகங்களிலும் பல்வேறு மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது, அம்மாறுதல்களில் ஒன்றே மின்னூலகங்கள் ஆகும். மின்னியல் முறையில் நூல்கள், படங்கள், தகவல் தொகுப்பு, ஆவணங்கள் மற்றும் அகராதிகள் போன்றவற்றை சேகரித்து கணினி வழியாக தொடர்பு கொள்ளும் மின்னூலகங்கள் பல்வேறு நூல்களை கால

வெள்ளத்தால் அழித்து விடாமல் பாதுகாக்கிறது. தகவல் மீட்டெடுப்பு ஒருங்கியம்(Information retrieval system) என அழைக்கப்படும் மின்னியல் நூலகம் எண்ணிம நூலகம், மெய்நிகர் நூலகம் எனும் பிற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.

**நூல்களை மின்னியல் முறையில்(Digital Method) சேகரித்து வைக்கும் மின்னூலகம் 1971ம் ஆண்டு குட்டன் பர்க்(Guten Berg) ஆய்வுத் திட்டத்தின கீழ் இல்லினாய்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் மைக்கேல் ஹார்ட்(Michal s.Hart) என்பவர் ஆவணங்கள், பண்பாட்டுத் தொடர்பான நூல்களைச் சேகரித்து ஒரு மின்னூலகத்தை உருவாக்கினார். இந்நூலகமே முதல் மின்னூலகமாகக் கருதப்படுகிறது.(தமிழ் இணையம் \ தமிழ் வலைத்தளங்கள் பங்களிப்பும்,ப,185)**

மைக்கேல் எஸ்.ஹார்ட் அவர்களின் முயற்சியைத் தொடர்ந்து அமெரிக்காவிலுள்ள டப்ஸ் பல்கலைக்கழகத்தில்(University of Tufts) பழைய கிரேக்க இலக்கியங்கள் மற்றும் அவற்றின் தொடர்பான செய்திகளையும் பெர்சியஸ் ஆய்வுத் திட்டத்தின் கீழ் பெர்சியஸ் மின்னூலகம் எனும் பெயரில் அமைக்கப்பட்டது. அந்நூலகம் 1995ம் ஆண்டு உலகளாவிய இணையதளத்தில் செயல்படம் நூலகமாக அமைந்தது.

**உலக மின்னியல் நூலகம்**

அமெரிக்க காங்கிரஸ் மற்றும் யுனஸ்கோ இணைந்து வழி நடத்தும் அனைத்துலக மின்னியல் நூலகம் உலகளாவிய அளவில் முப்பதிற்கும் மேற்பட்ட தேசிய நூலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் சார்ந்த நூலகங்களோடும் ஒப்பந்த இணைவுப் பெற்றுள்ளது. உலக மைய நூலகம் 171 நாடுகளிலுள்ள 72,000 நூலகங்களை இணைத்து சேவையாற்றி வருகிறது,

**தமிழ் மின்னூலகம்**

உலக மொழிகளில் கணினி இணையத்தில் அதிக அளவில் பயன்படுத்தப்படும் மொழிகளில் செம்மொழியாகிய தமிழ் மொழியும் ஒன்றாகும். இணையத்தில் தமிழ் நூல்களை மின் பதிப்புகளாக வெளியிட்டு உலகின் பல பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களுக்கு துணை நிற்கிறது.

**சுவிட்சர்லாந்தைச் சார்ந்த கே.கலியாணசுந்தரம் அவர்களின் முயற்சியினால் Tamil Electronic Library எனும் தமிழ் மின்னியல் நூலகம் அமைக்கப்பட்டது. இந்நூலகத்தில் தமிழ்மொழி இலக்கியம், தமிழ்ப் படைப்பாளர்கள், கலை, பண்பாடு தொடர்பான பல செய்திகள் மற்றும் தமிழ் மென்பொருள், தமிழ் இணைய தளங்கள், கணினி சார்ந்த கலைச்சொல் அகராதி, தமிழ் ஆய்வு மையம் சார்பான பல செய்திகள் இடம் பெற்றுள்ளன. இம்மின்னூலகத்தை எத்தகைய எழுத்துருக்களைப் பயன்படுத்தியும் அணுகலாம் எனும் குறிப்புத்**

**தரப்பட்டுள்ளது. அக்குறிப்புகளைப் பயன்படுத்தி சரியாகப் பயன்படுத்த இயலவில்லையெனில் kalian@geocities [kumar@vt.edu](mailto:kumar@vt.edu) எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொண்ட பயன்படுத்தலாம் என்ற குறிப்பும் தரப்பட்டுள்ளது. (தமிழ் இணையம் \ தமிழ் வலைத்தளங்கள் பங்களிப்பும், பயன்பாடுகளும்,ப.220)**

**மதுரைத்திட்டம்(Project of Madurai)**

மதுரைத்திட்ட நூலகம் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியின்றி உலகிலுள்ள தமிழ் ஆர்வலர்கள் மற்றும் தமிழ் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. 1998ம் ஆண்டு ஜனவரி 14 அன்று தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் தலைவராக சுவிட்சர்லாந்தைச் சார்ந்த முனைவர் கு.கல்யாணசுந்தரம் மற்றும் துணைத்தலைவராக முனைவர் குமார் மல்லிகார்ஜீனன் ஆகியோர் பணியாற்றி வருகின்றனர்.

இந்நூலகத்தில் சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், திருக்குறள், ஔவையார் பாடல்கள், கல்வெட்டுப் பாடல்கள், இக்கால இலக்கியங்கள், வைரமுத்து கவிதைப் படைப்புகள், உரை நூல்கள் என ஏறக்குறை 450 நூல்கள் இடம்பெற்றுள்ளன.

**மதுரைத்திடட் நூலகத்தில் மின்னூல்கள் தொடக்கக் காலக் கட்டத்தில் இணைமதி, மயிலை போன்ற எழுத்துருக்களில் அமைந்திருந்தது, 1999ம் ஆண்டு முதல் தகவல் தொழில்நுட்ப பரிமாற்றத்திற்கு பயன்படுத்தப்படும் தமிழ் தகுதர(TSCII — Tamil script code for Informaton Interchange) எழுத்துருக்களைக் கொண்டு மின்னூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நூலகத் திட்டத்தில் யார் வேண்டுமானாலும் தமிழ் இலக்கியங்களை மின்பதிப்புச் செய்து அனுமதிப் பெற்று இந்நூலகத்தில் சேர்த்துக் கொள்ளலாம். இந்நூலகத்திலுள்ள மின்னூல்கள் 2003ஆம் ஆண்டு முதல் ஒருங்குறி எழுத்துரு அமைப்பில் செயல்படுகின்றன.([https://www.projectmadurai.org/index.html](https://www.projectmadurai.org/index.html))**

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

உலகின் பல பகுதிகளில் வாழும் தமிழர்களின் மரபுகள், பண்பாடுகளைப் பாதுகாத்து அவர்களுக்கிடையே இலக்கியத் தொடர்பினை மேம்படுத்துதல், புலம் பெயர்ந்த தமிழர்களின் குழந்தைகளுக்கு தமிழ் மொழியைப் பயிற்றுவிப்பதைத் தனது நோக்கமாகக் கொண்டு செயல்படும் இத்தளம் ஆரம்ப காலக்கட்டங்களில் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் எனும் பெயரில் செயல்பட்டு வந்தது.

இந்த இணைய நூலகத்தின ஒரு பகுதியாகச் செயல்படும் மின்னூல்கள் பகுதியில் தமிழ் நூல்களின் ரோமன் வடிவம், கலைக்களஞ்சியம், அகராதிகள், கலைசொல் தொகுப்புகள், சுவடிக் காட்சியகங்கள், பண்பாட்டு காட்சியகங்கள் போன்ற பல உட்தலைப்புகளில் செய்திகள்

இடம்பெற்றுள்ளன. தற்காலச் சூழல்களில் பள்ளி, கல்லூரிகளில் ஆசிரியர்கள் இந்நூலகத்தைப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் பாடங்களைக் கற்றுக் கொடுக்கின்றனர்.

**தமிழிணையக் கல்விக்கழக மின்னூலகத்தில் தமிழ் எண்சுவடி, சொல்லடைவு, இலக்கண நூல்கள், சங்க இலக்கியம், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், காப்பியங்கள், சமய இலக்கியங்கள், நீதிநெறி நூல்கள், சிற்றிலக்கியங்கள், சித்தர் இலக்கியம், நாட்டுப்புற இலக்கியங்கள், சிறுவர் இலக்கியங்கள், நிகண்டுகள், அகராதிகள், கலைச்சொற்கள், கலைக்களஞ்சியம், இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்கள்(கவிதை, உரைநடை) போன்ற பல்வேறு நூல்கள் இடம்பெற்றுள்ளன. (இந்திய உயர்கல்வி நிறுவனங்களில் இணையவழிக் கல்வி, ப.57)**

சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள் வரை அனைத்து நூல்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் தமிழிணையக் கல்விக் கழகம் மின்னூலகத்தில்,

- இலக்கண, இலக்கிய நூல்களுக்கு ஒரே சமயத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட உரைகள் கிடைக்கிறது,
- சங்க இலக்கியங்களைப் பாடல், எண், சொல், பக்கம், பாடிய புலவர்கள், மன்னர்கள், வள்ளல்கள், திணை, கூற்று, பாடல் முதற்குறிப்பு, கருப்பொருள்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நமக்குத் தேவைப்படும் பாடல்களை எளிதில் தேடிப்படிக்கும் வசதிகள்
- அகராதிகள், தமிழ் சொற்களுக்கு இணையான ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை தேடிப் படிக்கும் வசதிகள்
- தேவாரப் பாடல்கைள இசையுடன கேட்கும் வசதிகள் என பல்வேறு வாய்ப்புகள் காணப்படுகின்றன.

**நூலகத்திட்டம்**

வணிக நோக்கமற்ற தன்னார்வ கூட்டு முயற்சியால் ஈழத்திலிருந்த வெளிவரும் தமிழ் நூல்களையும், இதழ்களையும் மின் வடிவமாக மாற்றி பாதுகாத்து வரும் இணைய நூலகமாக நூலகத்திட்டம் விளங்குகிறது, வாரம் ஒரு மின்னூலை உருவாக்க வேண்டும் எனும் குறிக்கோளுடன் தொடங்கப்பட்ட இம்மின்னூலகம் 2005ஆம் ஆண்டு தி.கோபிநாத், மயூரன் ஆகிய இருவரால் தொடங்கப்பட்டது. இந்நூலகம் ஆவண வகைகள், பகுப்புகள், பட்டியல்கள் எனும் தலைப்புகளை உள்ளடக்கிக் காணப்படுகின்றது. ஆவண வகைகளில் சஞ்சிகைகள், நூல்கள், ஆய்வேடுகள் போன்றனவும் பகுப்பு எனும் பிரிவில் எழுத்தாளர்கள், பதிப்பகங்கள், நூல் வகைகள் போன்றனவும் பட்டியல் எனும் பிரிவில் பொது நூல்கள் ஆகியனவும் அடங்கியுள்ளன.

**நூல்கள், இதழ்கள், பிரசுரங்கள், நினைவு மலர்கள், சிறப்பு மலர்கள், வாழ்கை வரலாறுகள், நூலகத்திட்டங்கள், குறிச்சொற்கள், வலை வாசல்கள், முஸ்லிம் ஆவணகம், மலையக ஆவணகம், பெண்கள் ஆவணகம், சுவடியகம், பல்லூடக ஆவணகம் எனும் பல்வேறு தகவல்களை உள்ளடக்கிய வகையில் நூலகத்திட்ட மின்னூலகம் அமைந்துள்ளது.(தமிழ் மின் உள்ளடக்கங்கள், ப,59)**

**உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்**

தமிழ் ஆய்வாளர்களுகும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் துணைபுரியும் வகையில் உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தினால் வெளியிடப்படும் ஆய்விதழ்கள் அடங்கிய தொகுப்பினை உள்ளடக்கியதாக இந்நூலகம் செயல்படுகிறது, தமிழியல் எனும் இணையப் பக்கங்களில் இதனை நம்மால் பார்க்க இயலும், 1972ஆம் ஆண்டு முதல் வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள், புத்தக மதிப்புரைகள் என 9000 பக்கங்களை இலவசமாக தரவிறக்கம் செய்து கொள்ளும் வசதிகளும் இந்நூலகத்தில் உள்ளன.

**ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்**

தென்னிந்திய ஆய்வுகளுக்கான வள மையமாக விளங்கும் இந்நூலகம் ரோஜா முத்தையா என்பரால் 1995ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1996ஆம் ஆண்டு சிகாக்கோ பல்கலைக்கழகத்தின் உதவியுடன் ஆராய்ச்சியாளர்களுக்காக இணையப் பக்கமாகத் திறக்கப்பட்டது. மனிதநேயம் மற்றும் சமுக அறிவியல், கலாச்சாரம் உள்ளிட் பல்வேறு துறைகளை உள்ளடக்கியதாகக் காணப்படும் இந்நூலகத்தில் நூலின் ஆசிரியர், நூல் தலைப்பு, நூல் வெளிவந்த ஆண்டு போன்ற வரிசைகளில் செய்திகள் இடம் பெற்றுள்ளன, வரலாற்று காப்பதைத் தொடர்ந்து பாதுகாத்து விரிவாக்குவதை நோக்கமாகக் கொண்ட இந்நூலகத்தில் சுமார் 3,00,000 நூல்கள் அமைந்துள்ளன.

**நூலக மென்மம்**

கணினி வழியாக நூலக ஆய்வுப் பணி முதன்முதலில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பக்கத்தில் நூலகத்தில் உள்ள அனைத்து நூல்களும் அட்டவணைப்படுத்தப்பட்டன. இவை மட்டுமல்லாமல் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வேட்டுத் தலைப்புகள் மற்றும் முழு விபரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டன. இதன் வழி ஒருவர் ஆய்வு செய்த தலைப்புகளில் மற்றொருவர் ஆய்வு செய்யும் நிலை தவிர்க்கப்பட்டது, இதனை அடிப்படையாகக் கொண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் சோத்கங்கா(shodhganga) எனும் நூலக மென்மம் வெளியிடப்பட்டது.

**2000ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழக தமிழியல் துறைக்கு நூலகத் தானியனுகு மென்மம்(Tamil Library Automation System) உருவாக்கப்பட்டது. இம்மென்பொருளில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நூல் தலைப்புகள் உள்ளீடு செய்யப்பட்டன. நூலாசிரியர் அகர வரிசை, தலைப்பு அகர வரிசைகளில் நூல்கள் வரிசைப்படுத்தப்பட்டன. மேலும் நூல் கருத்து அடிப்படையிலும் தரவுகள் வரிசைப்படுத்தப்படடுள்ளன.(தமிழும் கணினியும், பக்.155,156)**

**தமிழ் மின்னூலக வலையமைப்பு(TADIL NET — Tamil Digital Library Network)**

மின் இணைப்புகளிலுள்ள தமிழ் நூல்களைத் தொகுத்து வழங்குவதற்காக இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, ஐரோப்பா போன்ற நாடுகளிலுள்ள தமிழ் ஆர்வலர்கள், கல்வியாளர்கள், நூலகர்கள், மென் பொறியாளர்கள் போன்றோர்களின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்ட மின்னூலக வலையமைப்பே தமிழ் மின்னூலக வலையமைப்பு ஆகும்.

**“www.tamilnation.org/digital/tadilnet/html எனும் இவ்வலைத்தளத்தின வாயிலாகத் தனியார் மற்றும் பொது நூலகங்களில் இடம்பெற்றுள்ள மின்னூல்கள் பற்றிய செய்திகள், நூல்கள் கிடைக்கும் இடங்கள், நூல்களை மின்னூல்களாக்கும்(Digitization) முயற்சிகள், தரப்படுத்துதல்(Build common standars) போன்றவறைப் பற்றியத் தகவல்கள், நூல்களின் பட்டியல்களுடன் மின் ஆவணங்களின் பட்டியல்களையும் தெரிந்து கொள்ள முடிகிறது.( (தமிழ் இணையம் \ தமிழ் வலைத்தளங்கள் பங்களிப்பும், பயன்பாடுகளும், ப.106)**

இந்தியாவில் குறிப்பிடத்தகுந்த நூலகங்களாக விளங்கும் ரோஜா முத்தையா ஆய்வு நூலகம், கன்னிமாரா நூலகம், சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம், தேசிய நூலகம், தமிழ் மரபு அறக்கட்டளை நிறுவனத்தினரால் மின் நூல்களாக்கப்பட்டுள்ள தமிழ் நூல்கள், ஜெர்மன் கொலோன் பல்கலைக்கழகத்திலுள்ள (University of Cologne) இந்தியக் கல்வி மற்றும் தமிழ்க் கற்பித்தலுக்கான துறையிலுள்ள மின்னூல்கள் பட்டியலிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக பல்வேறு நூலகங்களிலுள்ள நூல்களைப் பற்றிய செய்தகிளை அறிந்து கொள்ளும் வண்ணம் மின்னூலக வலையமைப்பு செயல்பட்டு வருகிறது என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

**மின்னூலகச் சேவை மையம்**

அண்ணாப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் எம்.ஆனந்தகிருஸ்ணன், பேராசிரியர் கலாநிதி, சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சுந்தரேசன் போன்றோர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்டதே இந்த வலைத்தளம் ஆகும். நூலகங்களிலுள்ள தகவல்கள், தரவுகள், ஆவணங்கள் போன்றனவற்றை குறைந்த செலவில் இணையம் வழியாக தேடிப் பெறுவதற்கு உதவும் வகையில்

உருவாக்கப்பட்ட(MALIBNET — Madras Library Net) வலையமைப்பு 1993ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்வலையமைப்பில் ஏறக்குறைய முப்பத்தேழு கல்வி நிறுவனங்கள் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றன. இது இந்தியாவிலுள்ள நூலகங்களுக்கு இடையே ஓர் ஒருங்கிணைப்புப் பாலமாக விளங்குகிறது. இவ்வலையமைப்பில் 83 நூலகங்கள் உள்ளன.

மாணவர்கள், கல்வியாளர்கள், பொது மக்களுக்குப் பயன்படும் இவ்வலைத்தளம் இலக்கியம், நூலக அட்டவணை, நிறுவனங்கள் பற்றியத் தகவல்களைத் தேடிப் பெறும் வண்ணம் தேடல் வசதிகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

**முடிவுரை**

அச்சு நூல்களை மின்னூல்களாக மாற்றி மின் நூல்களைச் சேகரித்து நூலகம் சென்று புத்தகங்களைப் படிப்பது போன்று மின்னூலகங்களின் உதவியோடு நாம் இருந்த இடத்திலிருந்தவாறே புத்தகங்களை வாசிக்க இயலும் என்பதை இக்கட்டுரை வழி அறியமுடிகின்றது. மேலும் மின்னூலகத்தின் தோற்றம், உலக மின்னியல் நூலகம், தேசிய மின்னூலகம், தமிழ் மின்நூல்களை உள்ளடக்கிய தமிழ் இணையக் கல்விக்கழக நூலகம், மதுரைத்திட்ட நூலகம், ரோஜா முத்தையா ஆய்வு நூலகம் போன்ற நூலகங்களிலுள்ள தமிழ் நூல்கள் மற்றும் ஆய்வு இதழ்கள் அதனை எவ்வாறு பயன்படுத்துவது போன்ற பல்வேறு செய்திகளையும் இக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது.

நூலகங்களில் பயன்படுத்தப்படும் நூலக மென்மம், முனைவர் பட்ட ஆய்வேட்டுச் செய்திகளை அறிந்து கொள்ளும் வண்ணம் செயல்படும் சோத் கங்கா எனும் நூலக மென்மம், தமிழ் மின்னூலகச் சேவை மையத்தின் பணிகள் போன்றனவறைப் பற்றியும் இக்கட்டுரை வெளிப்படுத்தி நிற்கிறது.

**குறிப்பு நூல்கள்**

1. முனைவர் துரை.மணிகண்டன் & த.வானதி, தமிழ்க் கணினி இணையப் பயன்பாடுகள், கமலினி பதிப்பகம், தஞ்சாவூர்.613 102, முதல் பதிப்பு,டிசம்பர்,2012.
2. முனைவர் கதிர்முருகு, (ப.ஆ), பாரதிதாசன் கவிதைகள், சாரதா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு,1998.
3. பேராசிரியர் டாக்டர் ம.செ,இரபிசிங், தமிழ் இணையம் \ தமிழ் வலைத்தளங்கள் பங்களிப்பும், நர்மதா பதிப்பகம், சென்னை.600 015, முதல்பதிப்பு, மார்ச்.2009.
4. முனைவர் துரை.மணிகண்டன், இந்திய உயர்கல்வி நிறுவனங்களில் இணையவழிக் கல்வி, கமலினி பதிப்பகம், தஞ்சாவூர், 613 102, முதல் பதிப்பு, மே,2021.

5. முனைவர் இரா.குணசீலன், தமிழ் மின் உள்ளடக்கங்கள், வேர்களைத்தேடிப் பதிப்பகம், கோயம்புத்தூர்.641 407, முதல்பதிப்பு, ஜீன்,2023.

6. டாக்டர் இராதா செல்லப்பன், தமிழும் கணினியும், கவிதை அமுதம் வெளியீடு, திருச்சி.620 021, முதற்பதிப்பு,நவம்பர்,2011.

**இணையதளம்:**

7. https://www.projectmadurai.org/index.html.
8. https://www.tamilvu.org
9. http://www.srmuniv.ac.in/tamilperyam/diploma.dtt./lessons/Iyear/diplo3/html/dipo3004eapq.html.
10. www.ilakathamizh.org
11. http://rmrl.in/

## *References*

1. *Dr.Durai.Manikandan, T.Vanathi, Tamil Computers & Uses of Internet, Kamilini Publishers, Tanjore, 613 102. First Edition December,2012.*
2. *Dr.Kathirmurugu,(Editor), Bharathidhasan Kavithaigal, Saradha Publications, Chennai, First Edition,1998.*
3. *Dr.M.J.Rabisingh, Tamil internet/Tamil websites Participation and usage, Professor Narmadha Pathipagam, Chennai 600 015.*
4. *Dr.Durai.Manikandan,Online Education in Indian Higher Education Institutions, Kamilini Publishers, Tanjore, 613 102. First Edition, May,2021.*
5. *Dr.R.Gunaseelan, Tamil E —Contents, Verkalai Thedi Publication, Coimbatore — 641 407, First Edition, June 2023.*
6. *Dr.Radha Chellappan, Tamil Computers, Kavithai Amudham Publication, Trichy, First Edition,2011.*

## *Websites:*

7. http://www.srmuniv.ac.in/tamilperyam/diploma.dtt./lessons/Iyear/diplo3/html/dipo3004eapq.html.
8. https://www.projectmadurai.org/index.html.
9. https://www.tamilvu.org
10. www.ilakathamizh.org
11. http://rmrl.in/

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com